2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

துறையின் சார்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்து மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களின் அத்துணை வெட்டுத் தீர்மானங்களையும் முழுவதுமாக நான் படித்துப் பார்த்தேன். அவற்றில் பெரும்பான்மையானவை குறித்து, வரக்கூடிய துறையின் அறிவிப்புகளில் நிச்சயம் இடம்பெறும் என்ற உறுதியை உங்களிடத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். அப்படி இடம் பெறாதவை குறித்து, வரக்கூடிய காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அவற்றைச் செயல்படுத்துவதற்கு நிச்சயம் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களிடத்திலே பணிவன்போடு கேட்டுக்கொண்டு, அடுத்து அறிவிப்புகளுக்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அறிவிப்புகளை தலைப்புச் செய்தி போன்று சொல்லுங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். நீங்கள் பேச ஆரம்பித்து, சரியாக 50 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: எரிசக்தித் துறை பற்றிய அறிவிப்புகளை படிக்கிறேன்.

அறிவிப்புகள்

எரிசக்தித் துறை

1. துரித நடவடிக்கைமூலம் விவசாயிகளுக்கு 1,00,000 புதிய மின் இணைப்புகள் (Agriculture Service Connections) வழங்குதல் (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் 1,00,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.